# பொதுக்காலம் 28ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே! பொதுக்காலத்தின் 28-ம் ஞாயிறான இன்று உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஞானம் கடவுள் அளிக்கும் கொடையாகும். ஆகவேதான் சாலமோன் மன்னர் கடவுளிடம் ஞானத்தை கொடையாகக் கேட்டார். கடவுள் அளிக்கும் ஞானம் இருந்தாலே எல்லா வரங்களும் ஒருசேரக் கிடைக்கும். இந்த ஞானத்தை நாம் நமது வாழ்வில் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் உயிருள்ளதும் ஆற்றல் வாய்ந்ததுமான இறைவனின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு அதன்படி வாழ முற்பட வேண்டும்.

புனித பிரான்சிஸ் அசிசியார் ஞானத்தைப் பெற்றதால் தமது செல்வங்கள் அனைத்தையும் துறந்தார். இன்றைய நற்செய்தி செல்வந்தரின் மனநிலை பற்றி எடுத்துரைக்கிறது. நாம்தான் செல்வத்தை ஆன வேண்டுமேயன்றி, செல்வம் நம்மை ஆளவிடக்கூடாது. அதீத செல்வம் சேர்ப்பதுவும் ஒருவித போதை போன்றதே. நம்மிடம் இருப்பவற்றை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால் நிலைவாழ்வில் செல்வராக முடியும். நாமும் இறைவன் அருளும் ஞானத்தைப் பெற்று நிலைவாழ்வை அடைய வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! கடவுளின் கொடையான ஞானத்தைப் பெற்றுக் கொண்ட சாலமோன் மன்னர் இந்த ஞானத்திற்கு முன் ஏனைய செல்வங்களெல்லாம் மணலுக்கு சமமானது என்று உணர்த்தும் சாலமோனின் ஞான நூலின் வார்த்தைகளுக்கு ஞானத்தின் நலன்களை அடைய வேண்டும் என்ற மனநிலையோடு வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இறைவனின் பார்வையினின்று எவ்விதமான செயல்களையும் நாம் மறைக்க இயலாது என்று சிந்தனையை சீர்தூக்கிப் பார்க்க வைக்கும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் நலமிக்க இறைவார்த்தைகளை வாசிக்கக் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நன்மைகளின் நாயகனே இறைவா! எங்களின் நல்மேய்ப்பர்களுக்காக வேண்டுகிறோம். அவர்களுக்கு உடல், உள்ள, ஆன்ம நலன் தந்து பாதுகாத்தருளும், தம் மக்களை உமது வார்த்தையின் வழியில் நடத்திடத் தேவையான வரங்களையும், கனிகளையும் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நல்வழியில் நாங்கள் நடந்திட மோசே வழியாக திருச்சட்டங்களைத் தந்த எம் இறைவா! உமது கட்டளைகளை நாங்கள் ஏற்றுக் கொண்டு அவற்றை வாழ்வாக்கி,

உமக்கும் பிறருக்கும் ஏற்புடைய பலன் தரும் கனிகளாக வாழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. உண்மையின் நிறைவே எம் இறைவா! உமது வார்த்தைகளை அறிந்து கொண்ட நாங்கள் அவற்றை சீர்தூக்கி பார்த்து உமது திருவுளத்தை அறிந்து அதற்கேற்ப உமது துணையுடன் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தைக் கொடையாக வழங்கும் எம் இறைவா! இந்த உலகில் நன்மையானவை எவை? தீமையானவை எவை? என்பதனை உய்த்துணர்ந்து வாழும் ஞானத்தினை எங்களுக்குத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com